# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2150/24 - 2019 නොවැම්බර් මස 20 වැනි බදාදා - 2019.11.20

*2150/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு எடம்பிடிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் ஜெயசிங்ஹகம பிரதான நீர்த்தாங்கியை நிர்மாணிப்பதற்காகக் காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, நவெம்பர் 07.
5/2/3/1530.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தின், ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 56, தெஹிவின்ன கிராம அலுவலர் பிரிவில் ஹின்நாரங்கொல்ல பதிவுசெய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. விமல் ராஜரத்ன அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள 2014.12.16 ஆந் திகதியுடைய 3648 ஆம் இலக்க திட்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 1 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள எடம்பிட்டியவத்த என்றழைக்கப்படுகின்ற முழு விஸ்தீரணத்தில் இருந்து 0.2023 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :

துண்டு இலக்கம் - 01
காணியின் பெயர் - எடம்பிடியவத்த
விஸ்தீரணம் - 0. 2023 ஹெக்டயார்

வடக்கு : இ. கி. வ. 16 இன் துண்டு இலக்கம் 26V (எடம்பிடியவத்த) (க. ம. ஆ. சொந்தமான காணி) ;
கிழக்கு : இ. கி. வ. 16 இன் துண்டு இலக்கம் 26V (எடம்பிடியவத்த) (க. ம. ஆ. சொந்தமான காணி) மற்றும் குறித்த வரைபடத்தின் துண்டு இலக்கம் 2 ;
தெற்கு : குறித்த திட்ட வரைபடத்தின் துண்டு இலக்கம் 2 மற்றும் இ. கி. வ. 16 இன் துண்டு இலக்கம் 26V (எடம்பிடியவத்த) (க. ம. ஆ. சொந்தமான காணி) ;
மேற்கு : இ. கி. வ. 16 இன் துண்டு இலக்கம் 26V (எடம்பிடியவத்த) (க. ம. ஆ. சொந்தமான காணி).

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : தலைவர்,
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு.

12-66

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு பண்டாரவளை, தியதலாவை, ஹபுதலை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் துல்கொல்ல நீர் சேகரிப்புத் தொட்டி மற்றும் உட்செல்லும் பாதை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதிகளை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, நவெம்பர் 07.
5/ 2/ 3/ 1531.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தின், பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 66I, கிரேக் கிராம அலுவலர் பிரிவில், கிரேக் வத்த கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. நிஸாந்த புலத்கே அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள 2019.07.11 ஆந் திகதியுடைய 2019/005 ஆம் இலக்க திட்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 1 மற்றும் 2 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள கிரேக் வத்த மேல் பகுதி பிரிவு இலக்கம் 1 என்றழைக்கப்படுகின்ற முழு விஸ்தீரணத்தில் இருந்து 0.10114 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள இரண்டு காணிப்பகுதிகள் :

துண்டு இலக்கம் : 01
காணியின் பெயர் : கிரேக் வத்த மேல் பகுதி பிரிவு இலக்கம் 1
விஸ்தீரணம் : 0.10114 ஹெக்டயார்

வடக்கு : பூநாகல வீதி ;
கிழக்கு : தேயிலைத் தோட்டம் ;
தெற்கு : சுவீகரித்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணித்துண்டிலக்கம் 2 ;
மேற்கு : தேயிலைத் தோட்டம்.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : கிரேக் வத்த,
மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம்.

துண்டு இலக்கம் : 02
காணியின் பெயர் : கிரேக் வத்த மேல் பகுதி பிரிவு இலக்கம் 1
விஸ்தீரணம் : 0.01504 ஹெக்டயார்

வடக்கு : தேயிலைத் தோட்டம் மற்றும் சுவீகரித்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணித் துண்டிலக்கம் 1 ;
கிழக்கு : தேயிலைத் தொழிற்சாலை மற்றும் தேயிலைத் தோட்டம் ;
தெற்கு : தேயிலைத் தோட்டம் ;
மேற்கு : தேயிலைத் தோட்டம்.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : கிரேக் வத்த,
மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம்.

12-67

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.